பக்கங்கள்: 08

# காலைக்கதிர்

Kālaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 02 வள்ளுவர் ஆண்டு 2052 ஆடி 17 திங்கட்கிழமை 02.08.2021 கதிர் 136

## துப்பாக்கியுடன் ஒருவர் நயினாமடுவில் கைது!

வவுனியா மாவட்டம், புளியங்குளம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நயினாமடு பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பில் உள்நாட்டுத் துப்பாக்கியுடன் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

புளியங்குளம் பிரதேசத்தைச் சேர்ந்த 22 வயதுடைய நபரே

☞2

# இலங்கை கடற்படை மீண்டும் சூடு: இந்திய மீனவர் ஒருவர் படுகாயம்!

## தமிழக மீனவர்கள் கொந்தளிப்பு



(ந.லோகதயாளன்)

இலங்கை கடற்படையினர் மேற்கொண்ட துப்பாக்கிச்சூட்டில் இந்திய மீனவர் ஒருவர் படுகாயமடைந்துள்ளார் என்று தமிழக மீனவர் சங்கங்கள் தெரிவித்துள்ளன.

நாகபட்டின மீனவர்கள் கோடியாக் கரைக்கடலில் மீன்பிடித்த வேளை இலங்கை கடற்படையினர் அப்பகுதிக் கடலில் பிரவேசித்து மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் கலைச்செல்வன் என்னும் மீனவன் தலையில் படுகாயமடைந்த நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

☞2

## யாழுக்கான புதிய இந்தியத் துணைத்தூதராக ராகேஷ் நடராஜ் ஜெயபாஸ்கரன் பதவியேற்பு



(ந.லோகதயாளன், எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணத்துக்கான புதிய இந்தியத் துணைத்தூதராக ராகேஷ் நடராஜ் ஜெயபாஸ்கரன் இந்திய வெளியுறவு அமைச்சால் நியமிக்கப்பட்ட நிலையில் யாழ். மருதடி வீதியிலுள்ள இந்தியத் துணைத்தூதரகத்தில் உத்தியோக பூர்வமாகத் தனது கடமைகளை இன்று பொறுப்பேற்றார்

யாழ்ப்பாணத்துக்கான இந்தியத்

☞2

### 5 இலட்சம் ரூபா வீட்டுத்திட்டத்தின்

## மிகுதிக் கொடுப்பனவை வழங்குமாறு கோரி பயனாளிகள் இன்று போராட்டம்

(எஸ்.நிதர்ஷன்)

வீட்டுத்திட்டத்தின் மிகுதிக் கொடுப்பனவை வழங்குமாறு கோரி யாழ்., சங்கானை பிரதேச செயலகம் முன்பாக வீட்டுத்திட்டப் பயனாளிகள் இன்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

சுழிபுரம் மத்தி ஜே/173 கிராம சேவகர் பிரிவு மக்களே இவ்வாறு ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்தனர்.

இது தொடர்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் கருத்துத் தெரிவிக்கையில்,

கடந்த 2018 மற்றும் 2019 காலப்பகுதியில் ஜே/173 கிராம

☞2

### வலி. மேற்கு பிரதேச சபையின் முன்பாக

## சவப்பெட்டியுடன் உண்ணாவிரதம்

(எஸ்.நிதர்ஷன்)

வலிகாமம் மேற்கு பிரதேச சபையின் முன்னாள் காவலாளியான இராதாகிருஷ்ணன் சிவகுமார் என்பவர் பிரதேச சபையின் முன்னால் சவப்பெட்டியுடன் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளார்.

இது தொடர்பாக அவர் தெரிவிக்கையில்,

நிரந்தர ஊழியரான என்னைக் கடந்த 2015ஆம் ஆண்டு பணி இடைநீக்கம் செய்தனர்.

☞2



## சகோதரர், சகோதரி நீரில் மூழ்கி மரணம்

மொனராகலை மாவட்டத்தின் படல்கும்புர பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பரெவி எல்லயில் நீராடச் சென்ற ஒரே குடும்பத்தைச் சேர்ந்த இருவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

காமினிபுர, ஒக்கம்பிட்டிய பிரதேசத்தைச் சேர்ந்த 23, 30 வயதுடைய சகோதரர், சகோதரியே இவ்வாறு மரணமடைந்துள்ளனர்.

சடலங்கள் மீட்கப்பட்டுள்ள நிலையில் பிரேத பரிசோதனைக்காக வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளன.

☞2

## வடக்கு மாகாண சுகாதாரத் தொண்டர்கள் ஆளுநர் செயலகத்துக்கு முன் போராட்டம்

வடக்கு மாகாண சுகாதாரத் தொண்டர்கள், யாழ்ப்பாணத்திலுள்ள வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்துக்கு முன்னால் இன்று கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

தமக்கு வழங்கப்பட்ட நியமனக் கடிதத்துக்கமைய தமது பணிகளைப் பொறுப்பேற்க அனுமதிக்குமாறு கோரியே அவர்கள் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

வடக்கு மாகாண சுகாதாரத் தொண்டர்கள் ஏற்கனவே வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்துக்கு முன்னால் தொடர் கவனவீர்ப்புப் போராட்டத்தில்

☞2



## கரைச்சி பிரதேச சபை தவிசாளரை விசாரணைக்கு அழைத்தது ரி.ஐ.டி.



கரைச்சிப் பிரதேச சபையின் தவிசாளர் அருணாசலம் வேழமாலிகிதனை எதிர்வரும் 06 ஆம் திகதி கிளிநொச்சி, பயங்கரவாதக் குற்றத் தடுப்புப் பிரிவுக்கு சமூகமளிக்குமாறு கிளிநொச்சிப் பொலிஸாரால் அறிவித்தல் வழங்கப்பட்டுள்ளது.

அண்மைக்காலமாக கரைச்சி பிரதேச சபையின் உறுப்பினர்கள் பலரும் கொழும்பு நான்காம் மாடியிலும், கிளிநொச்சியிலும் அமைந்துள்ள பயங்கரவாதக் குற்றத் தடுப்புப் பிரிவின் அலுவலகங்களுக்கு விசாரணைகளுக்காக அழைத்து நீண்டநேரம் விசாரணைக்குட்படுத்தப்பட்டு வரும் நிலையில் தற்போது சபையின் தவிசாளருக்கும் விசாரணைக்கான அறிவித்தல் வழங்கப்பட்டுள்ளது.

## காணாமல்போன குடும்பப்பெண் டெவோன் நீர்வீழ்ச்சியில் சடலம் மீட்பு

பத்தனை டெவோன் நீர்வீழ்ச்சியின் கீழ்ப் பகுதியில் நீரில் மிதந்துகொண்டிருந்த பெண்ணொருவரின் சடலம் நேற்று மாலை மீட்கப்பட்டது எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

பத்தனை நகரைச் சேர்ந்த வீரமலை மலர்விழி (வயது 52) என்ற குடும்பப் பெண்ணே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

கடந்த மாதம் 27ஆம் திகதி வீட்டிலிருந்து வெளியே சென்றவர் வீடு திரும்பாத நிலையிலேயே

☞2

# வடக்கு மாகாண சுகாதாரத் தொண்டர்கள் ஆளுநர் செயலகத்துக்கு முன் போராட்டம்






## சவப்பெட்டியுடன் .................

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
15 மாதங்களின் பின்னர் விசாரணைகள் எதுவுமின்றி எனக்கு மீண்டும் வேலை தந்தனர்.

அதன் பின்னர் நான் மதுபோதையில் கடமையில் இருந்ததாகக் கூறி கடந்த 2018 ஆம் ஆண்டு என்னை வேலையில் இருந்து பணிநீக்கம் செய்தனர்.

இது தொடர்பாக நான் பிரதேச சபையுடன் முரண்பட்டபோது வட்டுக்கோட்டை பொலிஸார் என்னை அழைத்துச் சென்று விசாரணைகளை மேற்கொண்டனர். அதன் பின்னர் பொலிஸார் என்னை நீதிமன்றத்தை நாடுமாறு கூறினர்.

நான் நீதிமன்றத்தை நாடியபோதும் பிரதேச சபை நீதிமன்றத்துக்கு சரியான முறையில் சமூகமளிப்பதில்லை. இதனால் நான், பிரதேச சபையின் ஓய்வு பெற்ற உத்தியோகத்தர்கள் அல்லது சட்டத்தரணிகள் அல்லது சமாதான நீதிவான் முன்னிலையில் எனது பிரச்சினைகளை விசாரணை செய்யுமாறு கூறினேன். ஆனால், பிரதேச சபை அந்த நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவில்லை.

2018 ஆம் ஆண்டிலிருந்து இன்று வரை மூன்று வருடங்கள் நான் விசாரணைகள் எதுவுமில்லாமல் வேலையும் இல்லாத நிலையில் இருக்கின்றேன்.

இந்தநிலையில், மன விரக்தி அடைந்த நான், எனக்கான நீதியை வேண்டி, பிரதேச சபையின் முன்னால் சவப்பெட்டியுடன் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளேன் - என்றார்.

## சகோதரர், சகோதரி .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இந்தச் சம்பவம் தொடர்பில் படல்கும்புர பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இன்னுமொரு செய்தி 03 ஆமும் பக்கத்தில் )

## வடக்கு மாகாண ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
ஈடுபட்டிருந்தனர். யாழ். மாவட்டத்துக்கு வருகை தந்த விவசாய அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே போராட்டத்தில் ஈடுபட்டவர்களைச் சந்தித்துக் கலந்துரையாடியதுடன் அவர்களைக் கொழும்புக்கு வருமாறும், உயர்மட்ட சந்திப்புக்கு ஏற்பாடு செய்து தருவதாகவும் கூறியிருந்தார். அதற்கமைய போராட்டத்தில் ஈடுபட்டோருக்கும் அரச பிரதிநிதிகளுக்கும் இடையில் சந்திப்பு இடம்பெற்றது.

சந்திப்பின்போது குறித்த சுகாதாரத் தொண்டர்களை ஒரு லட்சம் வேலை வாய்ப்புப் பட்டியலுக்குள் உள்வாங்குவதாகத் தெரிவிக்கப்பட்டதையடுத்து அந்தப் போராட்டம் கைவிடப்பட்டிருந்தது.

இந்தநிலையில், தமக்கு வழங்கப்பட்ட நியமனக் கடிதத்துக்கமைய தமது பணிகளைப் பொறுப்பேற்க அனுமதிக் குமாறு கோரி அவர்கள் இன்று போராட்டத்தில் ஈடுபட்டனர்.

## காணாமல்போன .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
நேற்று சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

குறித்த பெண்ணின் சமுர்த்தி அட்டை, குடை மற்றும் காலணி ஆகியன கடந்தவாரம் டெவோன் நீர்வீழ்ச்சிக்கு அருகிலிருந்தது எனத் தெரிவித்த பொலிஸார், இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

சடலம் பிரேத பரிசோதனைக்காக வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டது.

இது தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை, கடந்த 18 ஆம் திகதி டெவோன் நீர்வீழ்ச்சியில் வீழ்ந்து 19 வயதான யுவதி ஒருவரும் காணாமல்போயிருந்த நிலையில், அவர் தொடர்பில் இது வரையில் எந்தத் தகவல்களும் அறியக் கிடைக்கவில்லை எனவும் பொலிஸார் மேலும் குறிப்பிட்டனர்.

## மிகுதிக் கொடுப் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
சேவகர் பிரிவுக்குட்பட்ட 45 குடும்பங்களுக்கு ரூபா ஐந்து லட்சம் பெறுமதியான வீட்டுத்திட்டம் வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

ஆனால், குறித்த வீட்டுத்திட்டத்துக்கான நிதி எமக்கு முழுமையாகக் கிடைக்கப்பெறவில்லை. ஒரு பகுதி அளவு நிதி மட்டுமே எமக்குக் கிடைக்கப் பெற்றுள்ளது. மிகுதி வேலைகளை நாங்கள் கடன்பட்டுத்தான் செய்துள்ளோம். இருந்தாலும் வேலைகளை முழுமையாகப் பூர்த்தி செய்ய முடியவில்லை.

எமது வீடும் முழுமை பெறாத நிலை ஒரு பக்கம் இருக்க மறுபக்கம் கடன் கொடுத்தவர்களின் தொல்லை என நாங்கள் சொல்லொணாத் துயரங்களை அனுபவித்து வருகின்றோம்.

இந்த வீட்டுத்திட்டம் எங்களுக்கு வழங்குவதற்கு முதல் நாங்கள் நிம்மதியாகவும் சந்தோஷமாகவும் இருந்தோம். ஆனால், இந்த வீட்டுத்திட்டமானது தற்போது எங்களைக் கடன் சுமையில் தள்ளியுள்ளது.

எனவே, உரிய தரப்பினர் எமது விடயத்தைக் கருத்தில்கொண்டு எமது வீட்டுத் திட்டத்தின் மிகுதி நிதியை சீக்கிரம் தந்துதவுமாறு கேட்டுக்கொள்கின்றோம் - என்றனர்.

ஆர்ப்பாட்டத்தின் முடிவில் சங்கானை பிரதேச செயலரிடம் மகஜர் ஒன்றும் கையளிக்கப்பட்டது.

## யாழுக்கான புதிய ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
துணைத்தூதராக இருந்த பாலச்சந்திரன் சுரினாம் குடியரசு நாட்டுக்கும் அதனோடு இணைந்து மூன்று நாடுகளுக்குமான இந்தியத் தூதுவராகப் பொறுப்பேற்கவுள்ள நிலையில், யாழ்ப்பாணத்துக்கான புதிய இந்திய துணைத்தூதராக ராகேஷ் நடராஜ் ஜெயபாஸ்கரன் கடமைகளைப் பொறுப்பேற்றார்

தமிழ்நாட்டைச் சேர்ந்த இவர், கண்டியிலுள்ள இந்தியத் துணைத் தூதரகத்தில் பணியாற்றி வரும் நிலையில் யாழில் இன்று தனது கடமைகளைப் பொறுப்பேற்றார்.

## இலங்கை கடற்படை ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
படுகாயமடைந்த மீனவரின் தலையில் சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்பட்டுள்ளது எனவும், இந்தச் சம்பவத்தை அடுத்து தமிழக மீனவர்கள் மத்தியில் கொந்தளிப்பு ஏற்பட்டுள்ளது எனவும் அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (இன்னுமொரு செய்தி 05ஆம் பக்கத்தில்)

## துப்பாக்கியுடன் ஒருவர் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

குறித்த நபரை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தவதற்கு பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

விளம்பரத் தொடர்புகளுக்கு
தொலைபேசி இலக்கம்- 076 443 8622
மின்னஞ்சல் - kalaikkathiradvt@gmail.com



நமது பார்வை
உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

# இந்திய உறுதிப்பாடு

இலங்கைத் தமிழர் தொடர்பில் இந்தியாவின் நிலைப்பாடு மீண்டும் ஒரு தடவை வெளிப்படுத்தப்பட்டிருக்கின்றது.

இந்திய வெளிவிவகார இராஜாங்க அமைச்சர் வீ.முரளிதரன் இந்தியாவின் உத்தியோகபூர்வ நிலைப்பாட்டை இந்திய நாடாளுமன்றத்தில் வெளியிட்டிருக்கின்றார். நாடாளுமன்றின் மாநிலங்கள் அவை உறுப்பினர் வை.கோபால்சாமி எழுப்பிய கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையிலேயே அவர் இந்திய நிலைப்பாட்டை வெளிப்படுத்தி உள்ளார்.

இது மேலோட்டத்துக்குப் பார்த்தால் வழமையான இந்திய கருத்து நிலைப்பாடுதான். ஆனால் அதனூடு திரும்பவும் ஒரு விடயத்தை இந்தியா வலியுறுத்தி இருப்பது கவனிக்கப்பட வேண்டும். ஜெனிவாவில் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலில் கடந்த மார்ச்சில் நடைபெற்ற 46 ஆவது அமர்வில் மேற்கு நாடுகள் கொண்டமைந்த குழுவின் ஏற்பாட்டில் இலங்கைக்கு எதிராகக் கடுமையான வாசகங்களில் அமைந்த தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டது.

இந்தத் தீர்மானம் தொடர்பான வாக்கெடுப்பில் இந்தியா நடுநிலை வகித்தது எனினும், இலங்கை தொடர்பான தன்னுடைய நிலைப்பாட்டில் தெளிவான ஒரு விடயத்தை அது திட்டவட்டமாகவும் உறுதியாகவும் தெரிவித்தது.

"இலங்கையில் தமிழர்களுக்கு சமத்துவம், நீதி, அமைதி மற்றும் கௌரவமான வாழ்க்கை உறுதிப்படுத்தப்படுவதில்தான் இலங்கையின் ஐக்கியம், ஒருமைப்பாடு, ஆள்புல ஒருமைப்பாடு ஆகியன அடங்கியுள்ளன என்று ஜெனிவாவில் இந்தியா கூறியமை மிக அர்த்தபூர்வமான – மிக கருத்தாழம் கொண்ட – இன்னொரு வகையில் பார்த்தால் கொழும்புக்கு எச்சரிக்கை தருகின்ற அம்சமாகும்.

இலங்கைத் தமிழர்களுக்கு சமத்துவம், நீதி மற்றும் அமைதியும் கௌரவமுமான வாழ்வு ஆகிய மூன்றும் கிட்ட வேண்டும். அந்த மூன்றில்தான் இலங்கையின் ஐக்கியம், ஒருமைப்பாடு, ஆள்புல இறைமை ஆகிய மூன்றும் தங்கியுள்ளன என்ற கூற்று இராஜதந்திர சொல்லாடலில் மிக ஆபத்தான எச்சரிக்கைதான்.

இந்த மூன்றும் உறுதிப்படுத்தப்படா விட்டால், அந்த மூன்றினதும் உறுதிப்பாடும் சந்தேகம்தான் என்பது இந்த வாசகத்தின் உட்பொருள்.

இது, ஜெனிவாவில் 46 ஆவது அமர்வில் இலங்கை தொடர்பாக நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திலும் விட ஆழமான – இலங்கைக்கு நெருக்கடியையும் அச்சுறுத்தலையும் இராஜதந்திர ரீதியில் தருகின்ற – எச்சரிக்கை அறிவிப்பாகும்.

இலங்கைத் தமிழர் விடயத்தில் மட்டுமல்லாமல், அதையும் தாண்டி பல்வேறு விவகாரங்களில் இலங்கை – இந்திய நல்லுறவு சீர்கெட்டு வருகையில் மேற்படி ஜெனிவா அமர்வில் இலங்கை தொடர்பாகத் தான் பிரதிபலித்த நிலைப்பாட்டை இந்தியா திரும்பவும் ஒரு தடவை நாடாளுமன்ற மாநிலங்களவையில் எதிரொலித்து இருக்கின்றது – மென்மையான வாசகங்களில்.

"இலங்கைத் தமிழர்களுக்கு சமத்துவம், நீதி, அமைதி மற்றும் கௌரவமான வாழ்வு வழங்கப்பட வேண்டும் என்பதில் இந்தியா உறுதியாக உள்ளது. தமிழ் மக்களின் நியாயமான அபிலாஷைகள் நிறைவேற்றப்படுவது இலங்கைக்கு நன்மையாக அமையும்" – என்று இந்திய வெளிவிவகார இராஜாங்க அமைச்சர் வீ.முரளிதரன் தெரிவித்துள்ளமை அதனைத்தான்.


"அர்த்தமுள்ள அதிகாரப்பகிர்வின் ஊடாகத் தமிழ் மக்களது உரிமைகளுக்கு மதிப்பளிக்கப்படுவது இலங்கையில் ஒருமைப்பாட்டுக்கு பங்களிப்பு செய்யும்" – என்று அவர் மாநிலங்களவையில் கூறியிருப்பது இந்தியா ஜெனிவாவில் பிரதிபலித்த நிலைப்பாட்டின் மீளுரைதான். அதற்குள் ஆயிரம் அர்த்தங்கள் பொதிந்து இருக்கின்றமையைக் கொழும்பு கண்டுணர்ந்து இருக்குமா என்பது கேள்விக்குறியே.

இந்தியாவுடன் சீர்கெட்டு வரும் உறவுகளை மேம்படுத்த இப்போது புதுடில்லி புறப்படுகிறார் புதிய தூதுவர் மிலிந்த மொறகொட என்று ஒரு செய்தி வந்துள்ளது.

அமைச்சரவை அந்தஸ்தில் உள்ள பதவி என்ற நிலைப்பாட்டுடன் புதுடில்லிக்கான தூதுவராக அவர் நியமிக்கப்பட்டு, இந்தியா அந்த நியமனத்தை ஏற்று, ஒரு வருடத்துக்கு மேல் ஆகி விட்டது. இன்னும் அந்தப் பதவியை அவர் ஏற்கவே இல்லை.

சீன உதவியுடன் இயங்கும் 'பாத் பைண்டர்' என்ற அமைப்பின் பிதாமகர் மிலிந்த மொறகொட. அவர் மூலம் புதுடில்லியை தாஜா படுத்தும் கோட்டா தரப்பின் தந்திரோபாயம் பயன் தருமா என்பது கேள்விக்குறியே.

# இரண்டு தடுப்பூசிகளையும் பெற்றுக்கொண்ட வைத்தியர்களுக்கு கொழும்பில் கொரோனா



கொழும்பு தேசிய வைத்தியசாலையில் இரண்டு தடுப்பூசிகளும் பெற்ற வைத்தியர்கள் இருவர் கொவிட் தொற்றுக்குள்ளாகியுள்ளனர்.

கொவிட் தொற்று மீண்டும் வேகமாகப் பரவும் நிலைமையைக் கருத்திற் கொள்வதற்காக இந்த விடயம் தொடர்பில் அவதானம் செலுத்த வேண்டும் என விசேட வைத்தியர் தெரிவித்துள்ளார்.

கொழும்பு வைத்தியசாலையில் சிகிச்சை பெறும் மூன்று நோயாளிகளில் ஒருவர் ஒட்சிசன் தேவையுடன் இருக்கிறார் என அவர் குறிப்பிட்டுள்ளார். இதுவரையில் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் கட்டமைப்பால் தாங்கிக் கொள்ள முடியாத மட்டத்தில் கொவிட் தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. சில விடுதிகள் மிகவும் நெரிசலாக உள்ளன, கொவிட் நோயாளிகள் ஒருபுறம் மற்றும் தொற்று இல்லாத நோயாளிகள் மறுபுறம் தனிமைப்படுத்தப்பட்டிருக்கின்றனர் என அவர் குறிப்பிட்டுள்ளார். கொவிட் தொற்றாளர்கள் மற்றும் ஏனைய நோயாளிகள் ஒரே கழிப்பறை மற்றும் உணவு உட்கொள்ளும் இடம் என்பவற்றை பயன்படுத்தும் சூழலுக்குள் நோயாளிகள் மேலும் அதிகரிக்க வாய்ப்புகள் உள்ளன. அத்துடன் ஒட்சிசனுடனான கட்டில்கள் அனைத்தும் நிரம்பியுள்ளமையால் கடும் நெருக்கடியான நிலைமை ஏற்பட்டுள்ளதென அவர் குறிப்பிட்டுள்ளார்.

# தீவிரமாகப் பரவும் டெல்டா வைரஸ் இலங்கையர்களுக்கு 3 தடுப்பூசிகள்?

## அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் கோரிக்கை

தற்போது வேகமாகப் பரவும் டெல்டா வைரஸ் தொற்று வைத்தியர்கள் உட்பட சுகாதாரத் துறையினரையும் தாக்குவதாக அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

இதன் காரணமாக மூன்றாவது கொவிட் தடுப்பூசி வழங்குமாறு அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளது.

சுகாதார அமைச்சின் பணிப்பாளர் நாயகத்திடம் கடிதம் ஒன்று அனுப்பி வைத்து இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

நோயாளிகளுடன் செயற்படும் வைத்தியர்கள் உட்பட சுகாதாரத் துறையினர் இரண்டு தடுப்பூசிகள் பெற்ற போதிலும் கொவிட் தொற்றுக்குள்ளாகியுள்ளனர்.

இதனால் பூஸ்டர் தடுப்பூசிகளை வழங்குமாறு தங்கள் கோரிக்கை விடுக்கின்றனர் என அரச வைத்திய அதிகாரிகள் சங்க உறுப்பினர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

# கனடா - ஸ்காா்பரோவில் விபத்து; இரண்டு வயது தமிழ் சிறுவன் சாவு!




கனடா – ஸ்கார்பரோவில் இடம்பெற்ற வாகன விபத்தில் இரண்டு வயது தமிழ் சிறுவன் உயிரிழந்துள்ளான் என ரொரண்டோ பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கடந்த சனிக்கிழமை மாலை 5 மணியளவில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. மார்க்கம் சாலை மற்றும் மெக்னிகோல் அவென்யூவுக்கு அருகிலுள்ள வாகனம் நிறுத்துமிடத்தில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் கூறியுள்ளனர்.

சம்பவ இடத்திற்கு பொலிஸார் வந்த போது, சிறுவன் படுகாயமடைந்திருந்தார் எனத் தெரிவிக்கப்படுகின்றது. மருத்துவர்கள் சிறுவனின் உயிரைக் காப்பாற்ற முயன்றனர், எனினும் சிறுவன் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளான்.

வாகனத்தை 39 வயதான பெண் ஒருவரே செலுத்தி வந்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது. சம்பவம் தொடர்பில் ரொரண்டோ பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

உயிரிழந்த சிறுவனின் பெற்றோர்கள் யாழ்ப்பாணம் புங்குடுதீவைச் சேர்ந்தவர்கள் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

# ஒலிம்பிக்கில் பங்கேற்ற இலங்கை வீராங்கனை தொடர்பில் கடும் விமர்சனங்கள் முன்வைப்பு

ஜப்பான் தலைநகர் டோக்கியோவில் தற்போது நடந்துவரும் ஒலிம்பிக் போட்டிகளில் இன்று நடந்த போட்டியில் பங்கேற்ற இலங்கை வீராங்கனை பற்றி சமுக வலைத்தளங்களில் விமர்சனங்கள் எழுந்துள்ளன.

800 மீற்றர் ஓட்டப் போட்டியில் பங்கேற்றுள்ள நிமாலி நியனாராச்சி என்ற வீராங்கனை தொடர்பிலேயே விமர்சனங்கள் எழுந்துள்ளன.

குறித்த வீராங்கனை தனது போட்டி இலக்கத்தை சட்டைப் பின் ஒன்றின் மூலம் கட்டி தொங்கவிட்டு காட்சிப்படுத்தியுள்ளமையே இவ்வாறு விமர்சனங்களுக்கு வித்திட்டுள்ளது.

அதேபோல ஒலிம்பிக் ஏற்பாட்டு குழு பற்றியும் விமர்சனம் எழுந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஒரே குடும்பத்தைச் சேர்ந்த இருவர் படல்கும்புரவில் நீரில் மூழ்கி மரணம்

படல்கும்புர – பரவியன் எல்ல பகுதியில் நீராடச் சென்ற ஒரே குடும்பத்தைச் சேர்ந்த இருவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தச் சம்பவத்தில் சகோதரன், சகோதரி ஆகியோரே நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதி பொலிஸ் மா அஜித் றோஹண இதனைத் தெரிவித்துள்ளார்.

காலைக்கதிர்
Kalaikkathir மாலைப்பதிப்பு





# ஈரானில் 91 ஆயிரத்தை நெருங்குகிறது கொரோனா உயிரிழப்பு எண்ணிக்கை

உலகம் முழுவதும் கொரோனா வைரஸ் தாக்குதலால் பாதிப்பு அடைந்தோர் எண்ணிக்கை தினமும் அதிகரித்து வருகிறது.

உலக அளவில் கொரோனாவால் பாதிக்கப்பட்ட நாடுகளில் ஈரான் தற்போது 12ஆவது இடத்தில் உள்ளது.

இந்நிலையில், கொரோனா வைரஸின் தாக்கம் அதிகரித்து வருவதால் ஈரானில் ஒரே நாளில் 32,511 பேர் பாதிப்பு அடைந்துள்ளனர்.

அங்கு கொரோனா வைரஸால் பாதிப்பு அடைந்தோர் எண்ணிக்கை 39 லட்சத்தைத் தாண்டியுள்ளது. மேலும், ஒரே நாளில் 366 பேர் பலியானதால் அங்கு உயிரிழந்தோர் எண்ணிக்கை 91 ஆயிரத்தை நெருங்குகிறது.

# மியன்மாரில் 2 ஆண்டுகளில் தேர்தல் நடத்தப்படும் என்கிறது இராணுவம்



மியன்மாரில் ஜனநாயக ரீதியில் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசை கடந்த பெப்ரவரி மாதம் 1ஆம்திகதி இராணுவம் கவிழ்த்துவிட்டு ஆட்சி அதிகாரத்தை கைப்பற்றியது. மேலும் நாட்டின் தலைவர் ஆங் சான் சூகி, அதிபர் வின் மைன்ட் உள்ளிட்ட முக்கிய அரசியல் தலைவர்களை கைது செய்து வீட்டுக் காவலில் வைத்துள்ளது. தேர்தல் முறைகேடு காரணமாக ஆட்சியை கவிழ்த்ததாக இராணுவம் கூறுகிறது.

### கொரோனா பரவலைக் கட்டுப்படுத்தத் தவறினார் எனக் கூறி

# தாய்லாந்து பிரதமரைக் கண்டித்து பிரமாண்ட வாகனப் பேரணி



கொரோனாப் பரவலைக் கட்டுப்படுத்தத் தவறினார்எனக் கூறி தாய்லாந்து பிரதமரைக் கண்டித்து பிரமாண்ட வாகனப் பேரணி இடம் பெற்றது.

கொரோனா தொற்றை திறம்பட கையாளத்தவறினார் எனக் கூறி, தாய்லாந்து பிரதமருக்கு எதிராக பிரமாண்ட வாகனப் பேரணி நடைபெற்றது. ஊரடங்கால் பொருளாதாரம் பாதிப்பு, தடுப்பூசிக்குத் தட்டுப்பாடு போன்ற காரணங்களால் தாய்லாந்து அரசு மீதான அதிருப்தி அதிகரித்தது.தலைநகர் பாங்காக்கில் கார்கள் மற்றும் மோட்டார்வாகனங்களில் திரண்ட எதிர்ப்பாளர்கள் ஹாரன் அடித்தும், மூன்று விரல்களில் சல்யூட் அடித்தும் அரசுக்கு எதிர்ப்புதெரிவித்தனர். ஊரடங்கு கட்டுப்பாடுகள் கடுமையாக்கப்பட்ட போதும் எதிர்ப்பாளர்களின் வாகனங்கள் 20 கிலோ மீற்றர் தூரத்துக்கு அணி வகுத்து நின்றன.

# கொலம்பியாவில் கள்ளச் சந்தையில் விற்க இருந்த அரிய வகை 100 விலங்குகள் மீட்பு



கொலம்பியாவில் கள்ளச் சந்தையில் விற்க இருந்த அரிய வகை 100 விலங்குகள் மீட்கப்பட்டுள்ளன.

கொலம்பியாவில் கள்ளச் சந்தையில் விற்க வைத்திருந்த பல்வேறு இனத்தை சேர்ந்த 100 விலங்குகளை அதிகாரிகள் மீட்டுள்ளனர்.

அங்கு உணவு மற்றும் மருந்து உள்ளிட்ட பல்வேறு தேவைகளுக்காக விலங்குகள் வேட்டையாடப்படுகின்றன. வேட்டையாடப்படும் விலங்குகள் கள்ளச் சந்தையில் விற்று மற்ற நபர்கள் வருமானம் பார்த்து வருகின்றனர்.

இந்த நிலையில் கள்ளச் சந்தையில் விற்க வைத்திருந்த puma கடி விலங்கு, முகத்தில் மட்டும் வெள்ளை நிறத்தில் காணப்படும் capuchin வகை குரங்குகள், arrau வகை ஆமைகள் என ஏறத்தாழ 100 உயிரினங்கள் மீட்கப்பட்டன. மீட்கப்பட்ட விலங்குகள் இராணுவ உதவியுடன் வனப் பகுதியில் விடப்பட்டன.

# பிரான்ஸில் கொரோனா கட்டுப்பாடுகளுக்கு எதிராக ஆயிரக்கணக்கான மக்கள் போராட்டம்



ஐரோப்பிய நாடான பிரான்ஸ், கொரோனா வைரஸால் பெரிதும் பாதிக் கப்பட்டது. அங்கு இது வரை கொரோனா 3ஆவது அலை வரை ஏற்பட்டு இருந்தது.

இதற்கிடையே சில நாள்களாக பிரான்ஸில் கொரோனாவால் பாதிக்கப்படுபவர்களின் எண்ணிக்கை உயர்ந்தபடி இருந்து வருகிறது. பிரான்ஸில் கொரோனா 4ஆம் அலை தாக்கக் கூடும் என்று நிபுணர்கள் எச்சரிக்கை விடுத்துள் ளனர்.

இதையடுத்துபிரான்ஸில்மீண்டும் கடும் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன. பொது இடங்களில் மக்கள் அதிகளவில் கூட தடை விதிக்கப்பட்டுள்ளது. முகக்கவசம் அணிவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. கொரோனா கட்டுப்பாடுகளுக்கு மக்கள் எதிர்ப்பு தெரிவித்து வருகிறார்கள்.

இந்த நிலையில் கொரோனா கட்டுப்பாடுகளுக்கு எதிர்ப்பு தெரிவித்து தலைநகர் பாரிஸ் மற்றும் பிற நகரங்களில் ஆயிரக்கணக்கான மக்கள் போராட்டம் நடத்தினார்கள். கட்டாய கொரோனா கட்டுப்பாடுகள் தங்களது சுதந்திரத்தை பறிக்கிறது என்று கோஷமிட்டனர்.


போராட்டக்காரர்கள் கூறும்போது,மனித உரிமை உள்ள நாட்டில் இப்படி செய்வது நம்ப முடியாதது.

இதனால் தான் தெருக்களில் இறங்கிப் போராடுகிறோம். எங்கள் சுதந்திரம் ஆபத் தில் இருப்பதாக நினைக்கிறோம்' என்றனர்.

போராட்டம் நடத்திய மக்களை கலைந்து செல்லுமாறு பொலிஸார் அறிவுறுத்தினர். ஆனால் மக்கள் கலைந்து செல்லாமல் தொடர்ந்து போராட்டம் நடத்தினர். இதில் ஏற்பட்ட தள்ளுமுள்ளுவில் பொலிஸார் போராட்டக்காரர்கள் இடையே மோதல் ஏற்பட்டது.

பாரிஸில் நடந்த மோதலில் 3 பொலிஸார் காயம் அடைந்தனர். போராட்டங்கள் தொடர்பாக 19 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என உள்துறை அமைச்சர் ஜெரால்ட் டர்மன் தெரிவித்துள்ளார்.





# இந்தியாவில் அனைத்து மக்களுக்கும் தடுப்பூசி செலுத்தப்பட்ட முதல் நகரமாக புவனேஸ்வர்

கொவிட் -19 க்கு எதிராக 100 சதவீத மக்களுக்கு தடுப்பூசி செலுத்திய இந்தியாவின் முதல் நகரமாக ஒடிசாவின் தலைநகரான புவனேஸ்வர் மாறியுள்ளது.

இது குறித்துப் பேசிய புவனேஸ்வர் மாநகராட்சியின் தென்கிழக்கு மண்டல துணை ஆணையர் அன்ஷுமன் ராத், புவனேஸ்வரில் உள்ள 100 சதவீத மக்களுக்கு கொவிட்-19 தடுப்பூசிபோடப்பட்டுள்ளது. இதனுடன், நகரத்தில் உள்ள ஒரு லட்சம் புலம்பெயர்ந்த தொழிலாளர்களுக்கு முதல் டோஸ் தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளது.

புவனேஸ்வர் மாநகராட்சி தனது மக்கள்தொகையில் 100 சதவீத மக்களுக்கு ஜூலை 31 இற்குள் தடுப்பூசி செலுத்தியுள்ளது. இந்த நேரத்தில், 18 வயதிற்கு மேற்பட்ட மொத்தம் 9,07,000 பேருக்கு இரண்டாவது டோஸ் தடுப்பூசி வழங்கினோம். சுமார் 31,000 சுகாதாரப் பணியாளர்கள், 33,000 முன்களப் பணியாளர்கள், 18-45 வயதுக்குட்பட்ட 5,17,000 பேர் மற்றும் 45 வயதுக்குமேற்பட்ட 3,20,000 பேருக்கு தடுப்பூசி செலுத்தப்பட்டது. ஜூலை 30 வரை சுமார் 18,35,000 டோஸ் கொவிட் தடுப்பூசிகள் செலுத்தப்பட்டுள்ளன எனத் தெரிவித்தார். தடுப்பூசி செலுத்தும் பணியை முடுக்கிவிட, புவனேஸ்வர் முழுவதும் 55 தடுப்பூசி மையங்கள் அமைக்கப்பட்டன. நகரத்தில் 10 டிரைவ்-த்ரூ தடுப்பூசி மையங்களும் அமைக்கப்பட்டன. முதியோர் மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்காக, பள்ளிகளுக்குள் 15 நோய்த்தடுப்பு மையங்கள் உருவாக்கப்பட்டன.

உள்ளூர் மக்களின் ஒத்துழைப்பைப் பாராட்டிய அன்ஷுமன் ராத், கொவிட் தடுப்பூசியின் பிரச்சாரத்தை மிகப் பெரிய வெற்றியாக மாற்றியதற்காக மாநகராட்சி சார்பில் புவனேஸ்வர் மக்களுக்கு நன்றி கூறுகிறேன். அரசுப் பணியாளர்களின் கடின உழைப்பு மற்றும் உள்ளூர் மக்களின் ஒத்துழைப்புடன் புவனேஸ்வர் நகரம் 100 சதவீத மக்களுக்கு தடுப்பூசி அளித்த இந்தியாவின் முதல் நகரமாக மாறியுள்ளது எனத் தெரிவித்திருக்கிறார்.

# நூற்றாண்டு கொண்டாடும் தமிழ்நாடு சட்டமன்றம்

நூற்றாண்டு கொண்டாடுகிறது தமிழ்நாடு சட்டமன்றம். இந்தியா முழுவதும் பரவிய பல புரட்சிகர சீர்திருத்தங்களுக்கு வித்திட்ட இடமாக தமிழ்நாடு சட்டமன்றம் இருந்திருக்கிறது. வியத்தகு வரலாறும், சீரிய பெருமையும் கொண்ட தமிழ்நாடு சட்டமன்றம் பழம்பெருமையும் கொண்டது. சென்னை மாகாணமாக இருந்த காலத்திலிருந்தே செயல்பட்ட பெருமையைக் கொண்டது தமிழக சட்டமன்றம். 1920 ஆம் ஆண்டே தேர்தலைச் சந்தித்த மன்றமாகவும் இது திகழ்கிறது. சென்னை மாகாணத்தில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளைக் கொண்ட சட்டமன்றம் 1921 ஜனவரி 12 ஆம் திகதி ஆரம்பித்து வைக்கப்பட்டது. அப்போது சென்னை மாகாணத்தின் ஆளுநராக இருந்தவர் விலிங்டன் பிரபு.



தமிழக சட்டமன்றம் உருவாக்கப்பட்ட காலகட்டத்தில் 3 ஆண்டுகளுக்கு ஒருமுறை தேர்தல் நடத்தப்பட்டது. முதல் தேர்தல் 1920 ஆம் ஆண்டும், 1923, 1926, 1930 ஆகிய ஆண்டுகளில் அடுத்தடுத்த தேர்தல்களும் நடத்தப்பட்டன. பெண்கள் தேர்தலில் வாக்களிக்க 1920 இல் தடை இருந்தது. சட்டத்தின் இந்தப் பிரிவை நீக்கி, பெண்களுக்கும் வாக்களிக்க வகை செய்யும் தீர்மானம் 1921 ஏப்ரல் முதலாம் திகதி சட்டமன்றத்தில் கொண்டுவரப்பட்டது. எனினும் 1923 இல்தான் இது நடைமுறைக்கு வந்தது. இயற்றப்பட்ட சட்டத்தின் அடிப்படையில் 1926 முதல் பெண்கள் தேர்தலில் வாக்களிக்கவும் தேர்தலில் போட்டியிடவும் நியமிக்கப்படவும் தகுதி பெற்றனர்.

தமிழக சட்டமன்றத்தின் முதல் பெண் உறுப்பினர் என்ற பெருமைக்குரியவர் டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி. 1935 ஆம் ஆண்டு இந்திய அரசுச் சட்டத்தின்படி, 1937 முதல் சென்னை உள்ளிட்ட மாகாணங்களில் ஈரவைகளை கொண்ட சட்டமன்றங்களாக மாற்றப்பட்டன. இவை சட்டமன்றப் பேரவை மற்றும் சட்டமன்ற மேலவை என்று அழைக்கப்பட்டன. 1952 இல் நடைபெற்ற தேர்தலில் வயது வந்த அனைவரும் வாக்களிக்கத் தகுதியானவர்கள் என்று அறிவிக்கப்பட்டது. சுதந்திரத்திற்குப் பின்னராக தமிழக சட்டமன்றத்தின் முதல் நிதி அமைச்சர் சி.சுப்பிரமணியன், 1957-58 இல் முதல்முறை யாக பட்ஜெட் உரையாற்றினார்.

1986 இல் எம்.ஜி.ஆரால் மேலவை கலைக்கப்பட்ட நிலையில், ஓரவை மன்றமாக தமிழ்நாடு சட்டப்பேரவை மாறியது. தேவதாசி முறை ஒழிப்புச்சட்டம், பெண்களுக்கு வாக்குரிமை, இட ஒதுக்கீடு, நில அரசுகளுக்கும் கொடியேற்றும் உரிமை, மாநிலப்பெயர் மாற்றம், இந்து சமய அறநிலையத்துறை உருவாக்கம், அனைத்து சாதியினரும் அர்ச்சகராகலாம் போன்ற பல சட்டவாக்கங்களுக்கு வித்திட்ட இடம் தமிழ்நாடு சட்டமன்றமாகும்.

ஆட்சிக் கலைப்புகள், குடியரசு ஆட்சி நிறுவப்பட்ட நிகழ்வுகள், சர்ச்சைகள், வாக்குவாதங்கள், வெளிநடப்புகள், கூச்சல் குழப்பங்கள் என எத்தனையோ அசாதாரண சம்பவங்களும் இங்கு அரங்கேறியிருக்கின்றன. நூறாண்டுகளைப் புரட்டிப்பார்க்கும்போது தமிழ்நாடு சட்டமன்றம் கடந்து வந்திருக்கும் பாதை முழுவதும் வரலாற்றின் முக்கிய தடங்கள் பதிந்து நிறைந்திருக்கின்றன. நூற்றாண்டு காணும் தமிழ்நாடு சட்டமன்றத்துக்கு ஈழத்தின் இளைய தமிழ்ப் பத்திரிகையான காலைக்கதிரின் வாழ்த்துகளும் உரித்தாகட்டும்.

# தமிழக மீனவர்கள் மீது இலங்கைக் கடற்படை துப்பாக்கிச்சூடு மீனவர் ஒருவர் படுகாயம்



தமிழகத்தின் கோடியக்கரை அருகே மீன் பிடித்துக் கொண்டிருந்த நாகை அக்கரைப் பேட்டை மீனவர்கள் மீது இலங்கைக் கடற்படையினர் துப்பாக்கிச்சூடு நடத்திய நிலையில் மீனவர்கள் அவசரமாக கரை திரும்பினர் என அங்கிருந்துவரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இலங்கைக் கடற்படையினர் துப்பாக்கியால்சுட்டதில்கலைச்செல்வன் என்ற மீனவரின் தலையில் குண்டுபாய்ந்துள்ளது என்றும் அவர் ஆபத்தான நிலையில் நாகை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் என்றும் கூறப்படுகிறது.

இலங்கைக் கடற்படையினரின் துப்பாக்கிச்சூட்டையடுத்து, விசைப்படகில் மீன்பிடித்துக் கொண்டிருந்த 10 மீனவர்கள் உடனடியாகக் கரைக்குத் திரும்பி, குறித்த தாக்குதல் பற்றி தகவலளித்துள்ளனர். இலங்கைக்கடற்படையினரின்தொடர்அத்துமீறலுக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் என மத்திய மாநில அரசுகளை தமிழக மீனவர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

# கொரோனாவின் மூன்றாவது அலை ஓகஸ்டில் ஐ.ஐ.டி. வல்லுநர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்!

ஓகஸ்ட் மாதத்தில் இந்தியாவில் கொரோனாவின் மூன்றாவது அலை ஆரம்பமாவதற்கு வாய்ப்புள்ளது என்றும் ஒக்டோபர் மாதத்தில் அது உச்சத்தை அடையலாமென்றும் ஐ.ஐ.டி. வல்லுநர்கள் எச்சரித்துள்ளனர்.

ஹைதராபாத் ஐ.ஐ.டியின் மதுகுமளி வித்யாசாகர் மற்றும் கான்பூர் ஐ.ஐ.டியின் மணிந்திரா அகர்வால் தலைமையிலான ஆராய்ச்சியாளர்கள் கணிதத் தரவுகளின் அடிப்படையில்கொரோனாவின்மூன்றாவது அலையை கணித்துள்ளனர். இவர்களது ஆய்வறிக்கையில், “ஓகஸ்ட் மாதத்தில் கொரோனாவின் மூன்றாவது அலை வருவதற்கான சாத்தியங்கள் உள்ளன. அவ்வாறு ஏற்பட்டால் ஒக்டோபர் மாதத்தில் உச்சத்தை அடையும். கேரளா, மகாராஷ்டிரா மாநிலங்களில் கொரோனாத் தொற்று தொடர்ந்து அதிகரித்து வருவதைப் பார்க்கும்போது மூன்றாவது அலை உருவாகும் வாய்ப்பு ஏறத்தாழ உறுதிப்படுகிறது. ஆனால், இரண்டாவது அலையைப் போன்று, அதில் இருந்த பாதிப்பு அளவுக்கு மூன்றாவது அலையில் இருக்காது. இரண்டாம் அலையில் அதிகபட்சமாக 4 லட்சம் வரை பாதிக்கப்பட்டனர். ஆனால், மூன்றாம் அலையில் ஒரு லட்சம் முதல் அதிகபட்சமாக ஒன்றரை லட்சம் பேர் வரை பாதிக்கப்படலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.



கொரோனாவின் இரண்டாவது அலை ஏற்படுவது குறித்தும் இந்த இருநிபுணர்களும் கணித ரீதியிலான ஆய்வை மேற்கொண்டு அறிக்கை வெளியிட்டிருந்தனர். கிட்டத்தட்ட அந்த அறிக்கையில் குறிப்பிட்டது போன்ற பாதிப்பு இரண்டாவது அலையில் இருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# மட்டக்களப்பில் ஆசிரியர் சங்கம் போராட்டம்




இலங்கை ஆசிரியர் சங்கத்தின் மட்டக்களப்பு மாவட்ட கிளையின் முன்னெடுப்பில் பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து ஆசிரியர்கள் மற்றும் அதிபர்களால் மாபெரும் ஆர்ப்பாட்ட பேரணி ஒன்று நேற்று காலை முன்னெடுக்கப்பட்டது.

24 வருடகாலமாக நீடிக்கும் அதிபர் ஆசிரியர்களின் சம்பள முரண்பாட்டிற்கு வாக்குறுதி அளித்ததன் பிரகாரம் தீர்வினைப் பெற்றுத் தருமாறு கோரி நாடளாவிய ரீதியில் இலங்கை ஆசிரியர் சங்கத்தினால் மேற்கொள்ளப்பட்டு வரும் போராட்டமானது மட்டக்களப்பிலும் மேற்கொள்ளப்பட்டது.

இலங்கை ஆசிரியர் சங்கத்தின் மட்டக்களப்புமாவட்டச்செயலாளர்உதயரூபன் தலைமையில் இடம்பெற்ற இப்போராட்டப் பேரணியில் அதிபர்கள், ஆசிரியர்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

ஆர்ப்பாட்டப் பேரணியானது காந்திப் பூங்காவில் ஆரம்பிக்கப்பட்டு மட்டக்களப்பு பொலிஸ் நிலைய சுற்றுவட்டம் வரை சென்று மீண்டும் காந்திப் பூங்காவில் நிறைவுற்றிருந்தது.

இதன் போது, வாக்குறுதியளித்ததன் பிரகாரம் அதிபர் ஆசிரியர்களின் சம்பள முரண்பாட்டுக்குத் தீர்வினைப் பெற்றுத் தா, அதிபர் ஆசிரியர்களைக் கௌரவப்படுத்து, அதிபர் ஆசிரியர் சேவையை அகப்படுத்தப்பட்ட சேவையாக அங்கீகரி, 24 வருட அதிபர் ஆசிரியர்களின் சம்பள முரண்பாட்டை நீக்கு, கல்வியில் இராணுவமயமாக்கலை நீக்கு, அதிபர் ஆசிரியர் மாணவர்களின் மன அழுத்த செயற்பாடுகளை நிறுத்து, அதிபர் ஆசிரியர் சம்பள முரண்பாடு தொடர்பிலான உயர்நீதிமன்ற தீர்ப்பை அமுல்படுத்து, கொத்தலாவல பாதுகாப்பு சட்டமூலத்தை அமுல்படுத்து போன்ற பதாதைகளை ஏந்திய வண்ணம் ஆர்ப்பாட்டப் பேரணி இடம்பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# வாழும் போதே வாழ்த்தும் பல்துறை சாதனையாளர் கௌரவிப்பு நிகழ்வு

காத்தான்குடி மீடியா போரத்தின் ஏற்பாட்டில் வருடாந்தம் இடம்பெறும் வாழும் போதே வாழ்த்தும் பல்துறை சாதனையாளர் கௌரவிப்பு நிகழ்வு காத்தான்குடியில் இடம்பெற்றது.

மீடியா போரத்தின் தலைவர் ஊடகவியலாளர் எம்.எஸ்.எம்.சஜீ தலைமையில் இடம்பெற்ற நிகழ்விற்கு முதன்மை விருந்தினராக காத்தான்குடி பிரதேச கல்விப் பணிப்பாளர் எம்.எம்.கலாவுதீன் கலந்துகொண்டார். இதன்போது கல்வி, ஊடகம் மற்றும் அரசியல் துறை சார்ந்தவர்கள் கௌரவிக்கப்பட்டனர். கொவிட் சூழ்நிலையினை கருத்திற்கொண்டு சுகாதார நடைமுறை களைப் பின்பற்றியவாறு இடம்பெற்ற இந்த நிகழ்வில் காத்தான்குடி மீடியா போரத்தின் உறுப்பினர்கள் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# மட்டக்களப்பு புனித இஞ்ஞாசியார் ஆலய 105 ஆவது வருடாந்த திருவிழா நிறைவு

மட்டக்களப்பு மறை மாவட்டத்தின் கல்லடி – டச்பார் புனித இஞ்ஞாசியார் ஆலயத்தின் 105 ஆவது வருடாந்தத் திருவிழா நேற்று கொடியிறக்கத்துடன் நிறைவு பெற்றது.

கொவிட் 19 சூழ்நிலையினை கருத்திற்கொண்டு சுகாதார வழிமுறைகளைப் பின்பற்றி நடை பெற்ற இத்திருவிழாவில் புனிதரின் திருவுருவப்பவனி இம்முறை இடம்பெறவில்லை.

நேற்று காலை 7.30 மணிக்கு மட்டக்களப்பு மறைமாவட்ட ஆயர் ஜோசப் பொன்னையா ஆண்டகை தலைமையில் பெருவிழா கூட்டுத் திருப்பலியானது மறை மாவட்ட இயேசு சபை மேலாளர் அருட்தந்தை வின்சன்ட் ரொசைரோ அடிகளார், அருட்தந்தையர்களான லோரன்ஸ் லோகநாதன், யோன் ஜோசப் மேரி, மகிமைதாசன், கிறைட்டன் அவுஸ்கோன் ஆகியோர் இணைந்து ஒப்புக்கொடுத்தனர்.

அருட்சகோதரர்கள், அருட்சகோதரிகள் மற்றும் துறவிகள், பொது நிலையினரென குறிப்பிட்டளவிலானோர் கலந்துகொண்ட திருவிழாவானது கொடியிறக்கப்பட்டு, புனிதரின் ஆசிரைத் தொடர்ந்து 105 ஆவது ஆண்டு திருவிழா நிகழ்வுகள் நிறைவுபெற்றமை குறிப்பிடத்தக்கது.



# அட்டப்பளம் பகுதியில் விபத்து ஒருவர் பலி; மூவர் படுகாயம்

கல்முனை– அக்கரைப்பற்று பிரதான வீதியிலுள்ள நிந்தவூர், அட்டப்பளம் பகுதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன் மூவர் படுகாயமடைந்துள்ளனர்.

குறித்த சம்பவத்தில் அக்கரைப்பற்று 19 பிரிவு காசிம் ஆலிம் வீதியைச் சேர்ந்த 48 வயதுடைய சம்சுதீன் சஹாப்தீன் என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

நிந்தவூர்– அட்டப்பள்ளம் பகுதியில் நேற்று ஞாயிற்றுக்கிழமை இரவு, கல்முனையில் இருந்து அக்கரைப்பற்றினை நோக்கிப் பயணித்த டொல்பின் ரக வான் ஒன்று அட்டப்பள்ளம் பகுதியில் வைத்து வானின் ரயர் ஒன்று வெடித்ததையடுத்து வான் வேகக்கட்டுப்பாட்டை மீறி, எதிரே அக்கரைப்பற்றில் இருந்து நிந்தவூருக்குச் சென்ற ஒரே குடும்பத்தைச் சேர்ந்த தந்தையும் மகனும் பிரயாணித்த மோட்டர் சைக்கிளுடனும் இன்னொரு மோட்டர் சைக்கிளுடனுமாக இரு மோட்டர் சைக்கிளுடன் மோதி விபத்துக்குள்ளானது.

இதில் தந்தை உயிரிழந்ததுடன் மகன் உட்பட 3 பேர் படுகாயமடைந்த நிலையில் சிகிச்சைக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர் என பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

மேலும் வானை செலுத்திய சாரதியை கைது செய்துள்ள பொலிஸார், அவரை நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

குறித்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை சம்மாந்துறை போக்குவரத்து பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்

# ஆலையடிவேம்பில் தடுப்பூசி பெற்றவர்களின் எண்ணிக்கை 11 ஆயிரத்தைக் கடந்துள்ளது

ஆலையடிவேம்பு பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்குட்பட்ட பிரதேசங்களில் 30 வயதிற்கு மேற்பட்ட 11,183 பேர் தடுப்பூசியை ஏற்றிக்கொண்டுள்ளமையுடன் தடுப்பூசி பெற தகுதியானவர்களின் எண்ணிக்கையில் இத்தொகை 81.8 வீதமாக காணப்படுகின்றது.



இரண்டாம் கட்டமாக தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கை கடந்த மூன்று தினங்களுக்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்ட நிலையில் நேற்றுடன் 11 ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் தடுப்பூசியினைபெற்றுக்கொண்டனர் எனஆலையடிவேம்பு பிரதேச சுகாதார பதில் வைத்திய அதிகாரி எஸ்.அகிலன் தெரிவித்தார்.

தடுப்பூசி ஏற்றப்படும் நடவடிக்கை தூர பிரதேச மக்கள் நலன் கருதி நடமாடும் சேவை மூலமும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது இதற்கமைவாக நேற்று கண்ணகி கிராமத்திலும் இன்று அலிக்கம்பை கிராமத்திலும் இச்சேவை இடம்பெறுவதாக அவர் கூறினார்.

தூர பிரதேசங்களில் வாழும் மிகவும் கஸ்டமான மக்களின் நலன்கருதியே கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஜி.சுகுணனின் ஆலோசனையின் பிரகாரம் நடமாடும் சேவை இடம்பெறுவதாகவும் இதன் மூலம் மக்கள் இலகுவான முறையில் தடுப்பூசியினை பெற்று வருகின்றனர் எனக் குறிப்பிட்டார்.

இதேநேரம் மேலதிமாக தடுப்பூசிகள் கிடைக்கப்பெற்றதன் பிற்பாடே ஏனைய நான்கு இடங்களில் தடுப்பூசிகள் ஏற்றப்படும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும் அவர் கூறினார்.

தடுப்பூசி ஏற்றப்படும் நடவடிக்கைகளில் வைத்தியர்கள், பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள், தாதியர்கள்,குடும்பநல உத்தியோகத்தர்கள் மற்றும் சுகாதார ஊழியர்கள் கடமையாற்றி வரும் நிலையில் பிரதேச செயலாளர் வி.பபாகரனின் வழிகாட்டலில் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் இணைந்து பொதுமக்களை பதிவு செய்தல் மற்றும் ஒழுங்குபடுத்தல், விழிப்பூட்டல் நடவடிக்கைகள் என பல்வேறு செயற்பாடுகளில் முற்றும் முழுதாக ஈடுபட்டு வருகின்றனர்.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனைக்குட்பட்டபிரிவுகளுக்கு1,40,000ஆயிரம்;தடுப்பூசிகள் கிடைக்கப்பெற்றுள்ள நிலையில் இந்நட வடிக்கை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஜி.சுகுணன் மேற்பார்வையில் இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# ஒலிம்பிக் 100 மீற்றர் ஓட்டப்போட்டியில் இத்தாலி வீரர் ஜேக்கப் தங்கம் வென்றார்




டோக்கியோ ஒலிம்பிக்கில் உலகின் அதிவேக வீரர் யார் என்பதை நிர்ணயிக்கும் 100 மீற்றர் ஓட்டப்போட்டி நேற்றிரவு நடைபெற்றது. 8 வீரர்கள் பங்கேற்ற இந்தப் போட்டியில், தவறான ஆரம்பத்தால் இங்கிலாந்து வீரர் ஜார்னெல் ஹ்யூக்ஸ் தகுதி நீக்கம் செய்யப்பட்டு வெளியேற்றப்பட்டார்.

மீதமுள்ள 7 வீரர்களில் கணிப்புகளுக்கு மாறாக இத்தாலி வீரர் லாமோன்ட் மார்செல் ஜேக்கப்ஸ் 9.80 வினாடிகளில் முதலாவாக வந்து தங்கப்பதக்கத்தை வென்றார்.

இத்தாலி நாட்டவர் ஒருவர் ஒலிம்பிக் 100 மீற்றர் ஓட்டத்தில் பட்டத்தை வெல்வது இதுவே முதல் முறையாகும். அதிவேக வீரராக உருவெடுத்துள்ள 26 வயதான மார்செல் ஜேக்கப்ஸ், அமெரிக்காவில் பிறந்து இத்தாலிக்கு இடம்பெயர்ந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. அமெரிக்காவின் பிரெட் கெர்லி வெள்ளிப்பதக்கமும் (9.84 வினாடி), கனடாவின் அன்ட்ரே டி கிராஸ் (9.89 வினாடி) வெண்கலப்பதக்கமும் பெற்றனர்.

உசேன்போல்ட்டினால்வெற்றிபெறுபவராக கணிக்கப்பட்டிருந்த அமெரிக்க வீரர் டிராவோன் புரோமெல் துரதிர்ஷ்டவசமாக அரையிறுதிச்சுற்றைத் தாண்டவில்லை. இதேபோல், முன்னாள் உலகச் சம்பியனான ஜமைக்காவின் யோகன் பிளாக்கும் அரையிறுதியுடன் வெளியேறினார்.

ஒலிம்பிக் 100 மீற்றர் இறுதிச் சுற்றில் ஜமைக்கா வீரர்கள் யாரும் இடம்பெறாதது 2000 ஆம் ஆண்டுக்கு பிறகு இதுவே முதல் முறை என்பது குறிப்பிடத்தக்கது.

## காஷ்மீர் பிரீமியர் லீக் சர்ச்சை இந்திய – பாகிஸ்தான் கிரிக்கெட் சபைகள் மோதல்



பாகிஸ்தான் நடத்தும் காஷ்மீர் பிரீமியர் லீக்கில் விளையாடக் கூடாது என இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை (பி.சி.சி.ஐ.) அழுத்தம் தருவதாக தென்னாபிரிக்காவின் முன்னாள் வீரர் கிப்ஸ் டுவிட்டரில் குற்றஞ்சாட்டியிருந்தார். இதையடுத்து பி.சி.சி.ஐ. தவறான போக்கைக் கடைப்பிடிப்பதாக பாகிஸ்தான் கிரிக்கெட் சபை கண்டன அறிக்கையொன்றை வெளியிட்டிருந்தது. இந்த விவகாரத்தை சர்வதேச கிரிக்கெட் சபை(ஐ.சி.சி.) யிடம் கொண்டு செல்லவுள்ளதாகவும் தெரிவித்திருந்தது.

இந்த நிலையில் செய்தி நிறுவனம் ஒன்றிற்கு பேட்டியளித்த பி.சி.சி.ஐ. அதிகாரி ஒருவர், பாகிஸ்தான் கிரிக்கெட் சபை குழம்பிய நிலையில் உள்ளதாகத் தெரிவித்துள்ளார். மேலும் பி.சி.சி.ஐ. மீது குற்றஞ்சாட்டியுள்ள கிப்ஸ், அவர்களது நாட்டுக்கு எதிராகவே சூதாட்ட நடவடிக்கையில் ஈடுபட்டவர் எனச் சாடியிருக்கும் அவர், காஷ்மீர் பிரீமியர் லீக் விவகாரத்தை ஐ.சி.சியிடம் பாகிஸ்தான் கொண்டு சென்றால் அதனை வரவேற்கிறேன் எனக் கூறியுள்ளார்.

## ஹங்கேரியன் கிராண்ட் பிரிக்ஸ் எஸ்டெபன் ஓகொன் முதலிடம்!



போர்முயுலா-1 கார்பந்தயத்தின் ஹங்கேரியன் கிராண்ட் பிரிக்ஸ் சுற்றில் அல்பைன் அணியின் வீரரான எஸ்டெபன் ஓகொன் முதலிடம் பிடித்துள்ளார்.

23 சுற்றுகளாக நடைபெறும் ‘போர்முயுலா-1’ கார் பந்தயத்தில் நடப்பு ஆண்டின் ஹங்கேரியன் கிராண்ட் பிரிக்ஸ், நேற்று ஹங்கரோறிங் சர்வதேச ஓடுதளத்தில் நடைபெற்றது.

இதில் 306.63 கிலோ மீற்றர் பந்தயத் தூரத்தை அல்பைன் அணியின் வீரரான பிரான்சின் எஸ்டெபன் ஓகொன், 2 மணித்தியாலங்கள் 4 நிமிடங்கள் 43.199 வினாடிகளில் கடந்து முதலிடத்தைப் பிடித்தார். இதற்காக அவருக்கு 25 புள்ளிகள் வழங்கப்பட்டன.

அவரைவிட 1.858 வினாடிகள் பின்தங்கிய நிலையில் பந்தயத் தூரத்தைக் கடந்த, அஸ்டன் மார்டின் அணியின் வீரரான செபஸ்டியன் வெட்டல் இரண்டாவது இடத்தைப் பெற்று 18 புள்ளிகளையும் தனதாக்கினார்.

2.736 வினாடிகள் பின்தங்கிய நிலையில், பந்தயத் தூரத்தைக் கடந்த, மெர்சிடஸ் பென்ஸ் அணியின் வீரரான லூயிஸ் ஹமில்டன் மூன்றாவது இடத்தைப் பிடித்தார். அதற்கு அவருக்கு 15 புள்ளிகள் கிடைத்தன. இதுவரை நடைபெற்று முடிந்துள்ள பதினொன்று சுற்றுகளின் முடிவில் லூயிஸ் ஹமில்டன் நான்கு வெற்றிகளைப் பெற்று 192 புள்ளிகளுடன் முதலிடத்தில் உள்ளார். ரெட் புல் அணியின் மக்ஸ் வெர்ஸ்டபன் ஐந்து வெற்றிகளுடன் 186 புள்ளிகளுடன் இரண்டாவது இடத்திலும், மக்லரன் அணியின் லெண்டோ நோரிஸ் 113 புள்ளிகளுடன் மூன்றாவது இடத்திலும் உள்ளனர்.

தொடரின் பன்னிரண்டாவது சுற்றான பெல்ஜியன் கிராண்ட் பிரிக்ஸ், இம்மாதம் 29ஆம் திகதி ஸ்பாஃபிராங்கோர்சம்ப்ஸ் சர்வதேச ஓடுதளத்தில் நடைபெறவுள்ளது.

## ஆஸ்திரேலிய தேர்வுக் குழுத் தலைவராக முன்னாள் அணித்தலைவர் ஜோர்ஜ் பெய்லி நியமனம்



ஆஸ்திரேலிய கிரிக்கெட் சபைத் தேர்வுக் குழுவில் 21 ஆண்டுகள் அங்கம் வகித்த ட்ரோவர்ஹான்ஸ்16ஆண்டுகள் தலைவராகப் பதவி வகித்து ஓய்வு பெற்றுள்ளார். இதையடுத்து புதிய தேர்வுக் குழுத் தலைவராக ஆஸ்திரேலிய அணியின் முன்னாள் அணித்தலைவர் ஜோர்ஜ் பெய்லி நியமனம் செய்யப்பட்டுள்ளார். இதை ஆஸ்திரேலிய கிரிக்கெட் வாரியம் நேற்று அறிவித்தது. கடந்த பெப்ரவரி மாதம் தேர்வுக் குழு உறுப்பினராக இணைந்த ஜோர்ஜ் பெய்லி குறுகிய காலத்துக்குள் தலைவர் பதவியைக் கைப்பற்றியிருக்கிறார். 38 வயதான ஜோர்ஜ் பெய்லி தேசிய அணிக்காக 90 ஒரு நாள், முப்பது ரி-10, 4 டெஸ்ட் போட்டிகளில் விளையாடியிருக்கிறார். அத்தோடு, ஒரு நாள் மற்றும் ரி-20 போட்டிகளில் மொத்தமாக 57 முறை அணிக்கு தலைமை தாங்கியிருக்கிறார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

தேர்வுக் குழு உறுப்பினராக தலைமைப் பயிற்சியாளர் ஜஸ்டின் லாங்கர் நீடிக்கிறார். ஓய்வுபெற்ற ட்ரோவர் ஹான்ஸ்க்குப் பதிலாக மூன்றாவது தேர்வு குழு உறுப்பினர் விரைவில் நியமிக்கப்படுவார் என்று ஆஸ்திரேலிய கிரிக்கெட் சபையால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## டோக்கியோ ஒலிம்பிக் ஆண்கள் டென்னிஸ் அலெக்ஸண்டர் ஸ்வெரவ் தங்கப்பதக்கம் வென்றார்!

டோக்கியோ ஒலிம்பிக்கில் ஆண்களுக்கான ஒற்றையர் பிரிவு டென்னிஸில் ஜேர்மனியின் அலெக்ஸன்டர் ஸ்வெரவ் தங்கப்பதக்கம் வென்றுள்ளார்.

ஆண்களுக்கான ஒற்றையர் பிரிவு இறுதிப் போட்டியில், ஜேர்மனியின் அலெக்ஸான்டர் ஸ்வெரவ், ரஷ்யாவின் கரேன் கச்சனோவை எதிர்கொண்டார்.

பரபரப்பாக நடைபெற்ற இப்போட்டியில், அலெக்ஸான்டர் ஸ்வெரவ், 6-3, 6-1 என்ற நேர் செட் கணக்குகளில் வெற்றிபெற்று தங்கப்பதக்கத்தை வென்றார். இரண்டாம் இடத்தைப் பிடித்த கரேன் கச்சனோவ் வெள்ளிப்பதக்கத்தை வென்றார். உலகின் முதல்நிலை வீரரான செர்பியாவின் நோவக் ஜோகோவிச்சை வீழ்த்தி, ஸ்பெயினின் பாப்லோ காரெனா பஸ்டா வெண்கலப்பதக்கத்தை வென்றிருந்தார்.



# கொரோனாவுக்காக நாட்டை மூடிவிட்டு முன்னோக்கிச் செல்வது கடினமானது

## முன்னாள் ஜனாதிபதி மைத்திரி கருத்து



கொவிட்-19தொற்றுநோய்க்கு மத்தியில் நாட்டை மூடிவிட்டு முன்னேறுவதுகடினமானபணி என்று முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

ஊடகங்களிடம்பேசியஅவர் இதனைக் கூறியுள்ளார்.

தொடர்ந்தும் பேசிய அவர்–

'சுகாதார மற்றும் பாதுகாப்பு கொள்கைகளை நடைமுறைப்படுத்தும் அதே வேளையில், அரச சேவைகளை மீண்டும் ஆரம்பிப்பதில் எந்தத் தவறும் இல்லை என்று நான் நம்புகிறேன். தொற்றுநோய்க்கு மத்தியில் வளர்ந்த நாடுகளும் தொடர்ந்து செயற்படுகின்றன. நாட்டை மூடிவிட்டு முன்னோக்கிச் செல்ல முடியாது, அதே சமயம் நிலவும் அபாயத்தையும் புரிந்து கொள்ள வேண்டும்' என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# தெற்கு அதிவேக நெடுஞ்சாலையில் நிறுத்தப்பட்ட வாகனத்தில் சடலம்!



தெற்கு அதிவேக நெடுஞ்சாலையின் வெலிபென்ன பிரதேசத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த சொகுசு ஜீப்பில் உயிரிழந்த நபர் ஒருவரின் சடலம் ஒன்று கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

மாலபே, பிரதேசத்தை சேர்ந்த தினேஷ் ஜயவீர என்ற 45 வயதுடைய பொறியியலாளர் ஒருவரே உயிரிழந்துள்ளவர் எனப் பொலிஸாரால் அடையாளம் காணப்பட்டுள்ளது. உயிரிழந்தவர் கடந்த 30 ஆம் திகதி காலை வீட்டில் இருந்து வெளியேறியுள்ளார். அவர் தெற்கு அதிவேக நெடுஞ்சாலை ஊடாக மாத்தறை நோக்கி பயணித்துக்கொண்டிருந்தபோது வெலிபென்ன பிரதேசத்திற்குள் நுழைந்துள்ளார் என பொலிஸ் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

உயிரிழந்தவர் உடல் நிலை பாதிக்கப்பட்டிருந்தமையால் வீட்டில் இருந்து வெளியேறி மீண்டும் வீட்டுக்கு வருகைதராதமையால் இது தொடர்பில் பொலிஸாரிடம் உறவினர்களால் முறைப்பாடு செய்யப்பட்டது. இந்த நிலையில் தெற்கு அதிவேக நெடுஞ்சாலையில் ஜீப் ஒன்று நிறுத்தப்பட்டுள்ளதாக பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டுள்ளது. பொலிஸார் சென்று சோதனையிடும் போது அதற்குள் சடலம் ஒன்று இருப்பதைக் கண்டுள்ளனர்.

உயிரிழந்தவரின் சடலத்தைக் குடும்பத்தினர் அடையாளம் காட்டியுள்ளனர். சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# சிறந்த கட்டமைப்பு கொண்ட சமூகம் நாட்டுக்கு அவசியம்

## கல்வி அமைச்சர் தெரிவிப்பு



தற்போதைய சூழ்நிலையில் சிறந்த கட்டமைப்பு கொண்ட சமூகம் நாட்டுக்கு அவசியம் என கல்வி அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி செயலகத்தில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

சிறுவர்களை வேலைக்கு அமர்த்துவது, மனிதாபிமான மற்ற முறையில் அவர்களை நடத்துவது, துஷ்பிரயோகம் மற்றும் கற்பழிப்பு போன்ற சமீபத்தைய நிகழ்வுகள் அதற்கான அவசியத்தை எடுத்துக் காட்டுகின்றன எனத் தெரிவித்தார்.

எனவே சிறந்த கட்டமைப்பு கொண்ட சமூகம் இந்த காலகட்டத்தில் தேவை என்றும் அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் வலியுறுத்தினார்.

இதேவேளை அரசாங்கம் இது தொடர்பாக பல முடிவுகளை எட்டியுள்ளது, அதே நேரத்தில் பல சட்டங்கள் நாடாளுமன்றத்தில் அறிமுகப்படுத்தப்பட்டு நிறைவேற்றப்பட்டன என்றும் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஹிஷாலினிக்கு நீதிகோரி ஹற்றனில் கவனவீர்ப்பு

நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீனின் வீட்டில் பணிபுரிந்து, தீக்காயங்களுடன் மரணமடைந்த சிறுமி ஹிஷாலினியின் மரணத்துக்கு நீதி கோரி ஹற்றன் நகரில் கவனவீர்ப்புப் போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

சமூக நல்வழி மன்றத்தின் ஏற்பாட்டில் ஹற்றன் மணிக்கூட்டுக் கோபுரத்துக்கு அருகில் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது ஆர்ப்பாட்டக்காரர்கள், பெண்கள் உரிமையைப் பாதுகாப்போம், சட்டத்தை நசுக்காதே, சிறுவர்களை வேலைக்கு அமர்த்துவதைத் தவிர்போம் உள்ளிட்ட வாசகங்கள் எழுதப்பட்ட பதாதைகளை ஏந்தி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

# சிறுமி துஷ்பிரயோகம்; ஆலய குருக்களைத் தேடி பொலிஸார் வலைவீச்சு!

சிறுமியொருவரைத் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தினார் எனக் கூறப்படும் குளியாபிட்டி போஹிங்கமுவ பகுதியிலுள்ள இந்து ஆலயமொன்றின் குருக்கள் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். காதல் தொடர்பை முறிப்பதற்காக, போஹிங்கமுவ பகுதியில் வசிக்கும் தாயொருவர், தனது 15 வயதான மகளுடன் கடந்த 26 ஆம் திகதி ஆலயத்துக்குச் சென்றுள்ளார்.

இதன்போது, ஆலயத்தின் குருக்களால் சிறுமி, துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தப்பட்டுள்ளார் எனப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

சந்தேகநபரான குருக்கள், பிரதேசத்தை விட்டு தப்பிச் சென்றுள்ளமையுடன், கடந்த சில தினங்களாக ஆலயமும் மூடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் ஆரம்பித்துள்ளனர்.

# தாயும் பிள்ளைகளும் படுத்துறங்கிய மெத்தையின்கீழ் 30 பாம்புக் குட்டிகள்



தாயும் பிள்ளைகளும் உறங்கிய கட்டில் மெத்தையின் கீழ் 30 நல்ல பாம்புக் குட்டிகள் மீட்கப்பட்ட சம்பவமொன்று அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

குருணாகல் மாவட்டம் மாவத்தகம தெல்கொல்வத்த பிரதேசத்தில் அமைந்துள்ள வீடொன்றில் இவ்வாறு பாம்புக் குட்டிகள் மீட்கப்பட்டுள்ளன.

வீட்டில் இருப்பவர்களின் தகவலை அடுத்து அங்கு சென்ற சூழலியலாளரும், குருணாகல் பிரதேச சபையின் பணியாளருமான கெலும் சோமரட்ன இந்த பாம்புக்குட்டிகளை இன்று (திங்கட்கிழமை) மீட்டுள்ளார்.

இந்த வீட்டின் உரிமையாளரது மனைவியும் பிள்ளைகளும் கட்டில் மெத்தையில் பாம்புக் குட்டிகள் இருக்கின்றமை தெரியாது, சில நாள்கள் நித்திரை கொண்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

கடந்த சனிக்கிழமை இரண்டு பாம்புக் குட்டிகளை கண்ட வீட்டின் உரிமையாளர் அவற்றை அடித்துக் கொன்றுள்ளார்.

பின்னர் நேற்று (ஞாயிற்றுக்கிழமை) மெத்தையில் ஒரு பாம்புக் குட்டி நித்திரை கொண்டவர்களின் மேல் ஏறிச் சென்றதால் சந்தேகத்தின் பேரில் இன்று கட்டில் மெத்தையை எடுத்து பார்த்த போது பாம்புக் குட்டிகள் இருக்கின்றமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

# கொவிட் தொற்றாளர்களுக்கு கம்பஹாவில் வீட்டில் சிகிச்சை

கம்பஹா மாவட்டத்தில் கொவிட் தொற்றாளர்கள் என அடையாளம் காணப்பட்டு நோய் அறிகுறிகளற்ற நாற்பட்ட நோயால் பாதிக்கப்படாதவர்களுக்கு வீட்டில் இருந்து சிகிச்சையளிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அவசியம் ஏற்பட்டால் மாத்திரம் வைத்தியசாலையில் சேர்க்கும் வேலைத்திட்டம் கம்பஹா மாவட்டத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக சுகாதார சேவை பணியகம் தெரிவித்துள்ளது. அனைத்துத் தொற்றாளர்களையும் சிகிச்சை நிலையங்களுக்கு அனுப்புவதற்குப் பதிலாக இந்த திட்டத்தை அறிமுகப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக மாவட்ட சுகாதாரப் பணிப்பாளர் விசேட வைத்தியர் நலின் ஆரியரத்ன தெரிவித்துள்ளார்.

இந்தத் திட்டத்தின் கீழ் நோய் அறிகுறிகளற்ற 5 – 60 வயதுக்குட்பட்ட கொவிட் தொற்றாளர்களை தங்கள் வீட்டில் உள்ளவர்களின் விருப்பத்துக்கமைய மாத்திரம் வீட்டில் வைத்து சிகிச்சையளிக்கப்படும் என குறிப்பிட்டுள்ளார். இவ்வாறு வீடுகளில் இருக்கும் நோயாளிகள் தொடர்பில் தேசிய மட்டத்தில் கொவிட் சிகிச்சை நிலையம் 24 மணித்தியாலங்கள் முழுவதும் தயார் நிலையில் இருக்கும். நோய் அறிகுறிகள் காணப்பட்டால் உடனடியாக சிகிச்சை நிலையங்களுக்கு அனுப்ப உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும் என மாவட்ட சுகாதார பணிப்பாளர் விசேட வைத்தியர் நலின் ஆரியரத்ன தெரிவித்துள்ளார்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 02.08.2021இல் வெளியிடப்பெற்றது.